**தலைப்பு 314 – தென் மாகாண சபை - 2024**

---

## 01. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணி

### 1.1 தூரநோக்கு

நடைமுறையில் அர்த்தமுள்ள நல்லாட்சி மூலம் ஒரு வளமான தென் மாகாணம்

### 1.2 பணிக்கூற்று

தென் மாகாணத்தில் நிலவும் மனித, நிதி மற்றும் பௌதீக வள முகாமைத்துவ எண்ணக்கருக்களின் அடிப்படையில் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் செயற்படுவதன் மூலம் மாகாணத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை உயர் மட்டத்திற்கு கொண்டுவருதல் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பை வழங்குதல்.

### 1.3 செயற்பணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல்.

## 2. கணக்குகள்

### 2.1 நிதிக்கூற்றுக்கள்

**மொத்த நிதியேற்பாடும் சேமிப்பும்**

தென் மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடு ரூபா 59,406.78 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த நிதியேற்பாட்டில் ரூபா 58,194.31 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2024.12.31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 55,268.78 | 54,922.06 | 346.72 | 0.6 |
| மூலதனம் | 4,138.00 | 3,272.25 | 865.74 | 20 |
| மொத்தம் | 59,406.78 | 58,194.31 | 1,212.46 | 2.04 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.